27.10.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

## வடகிழக்கு பருவமழை தொடங்கியது: தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த 2 நாள்களுக்கு மிதமான மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் கூறுகையில், "தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையின் அனேக இடங்களில் அடுத்த 2 நாள்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. மேலும் சென்னையிலும் மிதமான மழை இருக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக  மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டியில் 80 மி.மீ. மழையும் சித்தம்பட்டி, பெருந்துறையில் 50 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

## பாசிப் பயறு விளைச்சல் பாதிப்பு: விருதுநகர் விவசாயிகள் கவலை



விருதுநகர் அருகே வரலொட்டியில் பூச்சிகள் தின்றது போக வயலில் அறுவடை செய்து காய வைக்கப்பட்ட பாசிப் பயறு நெத்தை தனது மனைவியுடன் உடைக்கும் விவசாயி குருசாமி.  -  படம்: இ. மணிகண்டன்

காலநிலை மாற்றம் மற்றும் பூச்சித் தாக்குதல்களால் விருதுநகர் மாவட்டத்தில் பயறுவகை பயிர்கள் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பளவு 1.15 லட்சம் ஹெக்டேர். நடப்பு பருவத்தில் சுமார் 20 ஆயிரம் ஹெக்டேரில் நெல், 35 ஆயிரம் ஹெக்டேரில் சிறுதானியங்கள், 13 ஆயிரம் ஹெக்டேரில் பயறு வகைகள், 6 ஆயிரம் ஹெக்டேரில் எண்ணெய் வித்துக்கள், 9 ஆயிரம் ஹெக்டேரில் பருத்தி, 2 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பயறுவகை ஆண்டாக அறிவிக்கப்பட்டதால், பயறு வகை சாகுபடி பரப்பளவை அதிகரித்து உற்பத்தியில் தன்னிறைவு அடைய திட்டமிடப்பட்டது. அதன்படி, விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 13 ஆயிரம் ஹெக்டேரில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டும் பயறு வகை பயிர்கள் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளை வேளாண் துறை ஊக்குவித்தது.

ஆனால், காலநிலை மாற்றம் மற்றும் பூச்சி தாக்குதல்களால் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பயறு வகை பயிர்களில் பூச்சித் தாக்குதல்கள் ஏற்பட்டன. குறிப்பாக பல்வேறு வகையான மாவுப் பூச்சிகளின் தாக்குதல்களால் பருத்தி, எள், உளுந்து, பாசிப் பயறு, சூரியகாந்தி, வெண்டை, கத்தரி மற்றும் பப்பாளியில் அதிக பூச்சி தாக்குதல்கள் ஏற்பட்டுள்ளன.

இதுகுறித்து, விருதுநகர் அருகே வரலொட்டியைச் சேர்ந்த விவசாயி குருசாமி கூறியதாவது: சுமார் ஒன்றரை ஏக்கரில் பாசிப்பயறு சாகுபடி செய்தேன். வழக்கமாக 30 மூட்டை மகசூல் கிடைக்கும். ஆனால், இந்த ஆண்டு இலைப் பூச்சி மற்றும் மாவுப் பூச்சி தாக்குதல் அதிகமாக இருந்ததால் மகசூல் பாதியாகக் குறைந்துள்ளது. சந்தையில் ஒரு கிலோ பாசிப் பயறு ரூ.46 முதல் ரூ.48 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. விளைச்சல் குறைந்ததால் எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை என்றார்.